CENTRE FOR MONITORING ELECTION VIOLENCE
මැතිවරණ ප්‍රචණ්ඩත්‍රියා නිරීක්ෂණ මධ්‍යස්ථානය
தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம்
No. 6 1/B, Layards Road, Colombo 05. **Tel:** +94112584047 / +94114503001
**Fax:** +94112584047 **E-mail:** cmev@cpalanka.org **Web:** www.cmev.org

*திகதி: ஜனவரி 19, 2023,* கொழும்பு.

**<u>தேர்தல் ஆணைக்குழுவின் இரு உறுப்பினர்களுக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமை தொடர்பான விசேட ஊடக அறிக்கை</u>**

தேர்தல் ஆணைக்குழுவிலிருந்து இராஜினாமா செய்யாவிட்டால் கொலை செய்யடுவார்கள் என நேற்று மாலை தேர்தல் ஆணைக்குழுவின் இரு உறுப்பினர்களான திரு. K.P.P பத்திரண மற்றும் S.B திவாரட்ண ஆகியோர்க்கு வாட்ஸ்அப்(WhatsAPP) ஊடாக கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாக குற்றஞ்சாட்டப்படுகின்றமை சீ.எம்.ஈ.விக்கு(CMEV) அறியக்கிடைத்துள்ளது. இத்தகைய ஜனநாயக விரோத வன்செயல்களை சீ.எம்.ஈ.வி(CMEV) வன்மையாக கண்டிக்கின்றதுடன் ஏற்கனவே காவல்துறையின்(பொலிஸின்) குற்றப்புலனாய்வுப் பிரிவினரினால்(CID) ஆரம்பிக்கப்பட்டுள்ள விசாரணைகள் முழுமையான வெளிப்படைத்தன்மையுடன் நடாத்தப்படவேண்டும் எனவும் கோருகின்றது.

திட்டமிடப்பட்டுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்திவைப்பதற்கு பல்வேறு தரப்பினரினால் எடுக்கப்பட்ட பல முயற்சிகள் மற்றும் இச் சம்பவம் இந்த முயற்சிகளுடன் தொடர்புடையதாக இருப்பதற்கான சாத்தியம் குறித்து சீ.எம்.ஈ.விக்கு(CMEV) தனது கரிசனையை வெளிப்படுத்துகின்றது. எனவே உள்ளூராட்சி சபைத் தேர்தல் கட்டளைச்சட்டத்திற்கு இணங்க நிர்ணயிக்கப்பட்ட கால எல்லைக்குள் தேவையற்ற செல்வாக்குகள் எதுவுமின்றி தேர்தலை நடாத்துவதற்கு தேர்தல் அதிகாரிகள் உள்ளிட்ட அனைத்து செயற்பாட்டாளர்களுக்கும் அமைதியான மற்றும் பாதுகாப்பான சூழலை அரசாங்கம் ஏற்படுத்த வேண்டும் என வலியுறுத்துகின்றோம். இது போன்ற வருந்ததக்க சம்பவங்கள் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் மேலும் கால தாமதங்கள் ஏற்படாமல் இருப்பதை தேர்தல் ஆணைக்குழு உறுதிப்படுத்த வேண்டும் என சீ.எம்.ஈ.வி(CMEV) வலியுறுத்துகின்றது.

சீ.எம்.ஈ.வி(CMEV) ஆனது, *1997* ஆம் ஆண்டு மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம்(CPA) சுதந்திர ஊடக இயக்கம்(FMM) மற்றும் அரசியல் வன்முறைக்கு எதிரான கூட்டணி என்பன இணைந்து தேர்தல்தளுடன் தொடர்புடைய வன்முறைகளை கண்காணிப்பதற்காக உருவாக்கப்பட்ட ஒரு சுயாதீன பக்கச்சார்பற்ற அமைப்பாகும். தற்போது சீ.எம்.ஈ.வி(CMEV) ஆனது, CPA, FMM மற்றும் INFORM எனப்படுகின்ற மனித உரிமைகளை ஆவணப்படுத்துவதற்கான நிறுவனத்தின் கூட்டிணைவாலான அமைப்பாகும்.

| | | |
|---|---|---|
| **கலாநிதி. பாக்கியசோதி சரவணமுத்து** | **திரு. உதய களுப்பத்திரண** | **திரு. லசந்த டி சில்வா** |
| இணை-அழைப்பாளர் | இணை-அழைப்பாளர் | இணை-அழைப்பாளர் |